காட்சியும் – கருத்தும்

19124

ADRAS-90



திருவாவடுதுறை ஆதீனம்

ூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி தேவஸ்தானம்

காட்சியும் - கருத்தும்

★

திருவாவடுதுறை ஆதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்
அவர்களின் ஆணையின்படி
மகாகும்பாபிஷேக மலராக
வெளிவருகிறது.

★

28—4—61

உ

எங்கும் நிறைந்த அருள்மணியே
ஏக மணியே ஒளிர்மணியே
இறையோ னிடத்தில் நடனமிடும்
இமைய மணியே நவமணியே
கங்குல் பகலும் கண்டவெளிக்
கலைநான் குடைய திருமணியே
கண்ணின் மணியே பொன்மணியே
கமலா சனத்தில் வளர்மணியே
தங்கும் அடியார் இதயமதில்
தழைத்த மணியே தவமணியே
தரணிக் கொளியாய் இரவுபகல்
தானே வளர்ந்த தளிர்மணியே
மங்குங் கருத்தை நிலைநிறுத்தி
வதன வெளியில் படர்மணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைததாயே.

ஸ்ரீ அபயாம்பிகை



இராஜகோபுர வெளிப்புறத்தோற்றம்

வழி திறந்திருக்கிறது; உள்ளே போகலாம்.

கோபுரம் தூலலிங்கம். இதனைக் கண்டதும் சிவபெருமானைக் கண்டதுபோலவே எல்லாரும் வணங்குவதைப் பார்க்கிறோம் அல்லவா? ஆம்! வணங்கத்தான் தோன்றும். கோபுரமே சிவ சொரூபம். பிரமதீர்த்தமும் தெரிகின்றது.

இராஜகோபுர உட்புறத்தோற்றம்

(ஸ்ரீ மகாகணபதி)

முதலில் யாவரும் வணங்கவேண்டிய மூர்த்தி. சிவதரிசனத்திற்கு இடையூறு உண்டாகாதவாறு பாதுகாப்பதுமட்டும் அன்று: என்றும் எங்குமே இடைஞ்சல் உண்டாகாது. இவரை வழிபட்டு நன்மை அடையுங்கள்.

ஸ்ரீ ஆறுமுகசுவாமி

கையில் வேலோடும், வள்ளி தேவசேனா சமேதராக இருப்பவரைத் தெரியவில்லையா. இவர் கலியுகத் தெய்வம். கண்கண்ட தெய்வம். கைதொழுங்கள். கருதியவெல்லாம் கைகூடும்.

எவ்வளவு பரந்த விரிந்த வெளி! இறைவனுடைய அருள் எல்லாரையும் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியிருப்பதுபோல இந்த மண்டபமும் எத்தனை அன்பர்களை வரவேற்கிறது; அருட்பிரவாகத்திலே அமிழ்த்துகிறது. இங்கு புகுந்தால் எதிரில் மகாலட்சுமி சரசுவதி சன்னிதிகள். வடக்குப் பக்கத்தில் நடராஜர் சன்னிதி. பக்கத்தில் திருமுறைக்கோயில்.

உள் வடக்குப்பிராகாரம்



இது ஞானக்கருவூலம். சமயாசாரியர்கள் நால்வரும் சிவபெருமானைக் கண்டு, நாம் காணும்வண்ணம் காட்டிய அன்புகனிந்த அருட்பாடல்களாகிய பன்னிரு திருமுறைகள் இவை. இவை எழுந்தருளியுள்ள திருக்கோயில் இது. பக்கங்களில் நால்வர் குருமூர்த்திகளைத் தரிசியுங்கள்.

திருமுறைக்கோயில்





ஸ்ரீ கூத்தாடும்பிள்ளையார்

வலம் வாருங்கள்; கோஷ்டங்களில் இவரை முதலில் பார்க்கலாம். இவரது வாகனமாகிய பெருச்சாளி ஏனே பிள்ளையார் முகத்தையே பார்க்கிறது. பிள்ளையாரோ திருமாலுக்குச் சக்கரத்தை அருள, பிரமகபாலம் சக்கரத்தை வெளிப்படுத்தக் கூத்தாடுகிருர்.

அப்பப்பா! அடியில் புலியும், மானும், பாம்பும். முனிவர்கள் தன்னை மறந்து முகத்திலே ஆனந்தம் பொங்க அனுபவத்தில் ஆழ்ந்திருக்கின்றார்கள். குருநாதன் உபதேச மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார். ஞானம் வேண்டியவர்கள் விரும்பினால் - வேண்டினால் பெறலாம்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

சிற்பியின் சிந்தனை அவன் கைவழியாக வழிந்திருக்கும் வடிவச்சிறப்பு.

கீழே மூன்றுகால் நடராசா என்று எண்ணு தீர்கள்! பிருங்கி மகரிஷி தாண்டவதரிசனம் செய்த ஆனந்தத்தால் ஆடுகிருர்.

ஸ்ரீ ஆனந்தக்கூத்தப்பெருமான்-சிலையுரு

யாருக்காவது எதையாவது கொடுக்க வேண்டுமானல் கணவனும் மனைவியுமாக இருந்துதானே கொடுக்கவேண்டும். வரிசை வரிசையாக அருளை விரும்பி அன்பர்கள் வருகிருர்கள். பெருமானும் பெருமாட்டியும் அருளாரமுதத்தை வாரி வாரி வழங்குகிருர்கள்.



ஸ்ரீ கங்காவிசர்ஜனமூர்த்தி

உமாதேவியாருக்கு ஊடல்; ஒரு பக்கம் நாணிக் கோணி நிற்கிறார். பெருமான் கம்பீரமாகத் தம்முடைய சடையிலிருந்து கங்கையை விடுதலை செய்கிறார். அவருடைய வலதுகையிற்பட்டு அருள்வெள்ளமாகப் பெருகுகின்றது கங்கை. அங்கேயும் ஆணவம் எங்கே தலையெடுத்துவிடுமோ என்கிற அச்சம். அதனால் வலது காலை முயலகன் தலைமேல் ஊன்றி நிற்கிறார்.

என்ன கவர்ச்சி? என்ன விளக்கம்? மண்டபத்தின் உள்ளே கூர்ந்து நோக்குங்கள். அபயாம்பிகையைத் தரிசிக்கலாம். முன்னே சரவிளக்கு, குத்துவிளக்கு, விருக்ஷதீபம் முதலியன.

ஸ்ரீ அபயாம்பிகை சந்நிதி





ஸ்ரீ யோக தட்சிணாமூர்த்தி

இது அருமையானமூர்த்தி. தட்சிணாமூர்த்தி பேதங்களில் ஒன்று. சில தலங்களிலேதான் உண்டு. யோகத்தில் எழுந்தருளியிருக்கிறார் இவர். முகத்தில் சாந்தம். கண்களில் கருணை. கரத்தில் சின்முத்திரை எல்லாம்.

சிவலிங்கம் இருக்கிறது. பூசித்துக்கொண்டிருப்பவர் யார்? சங்கு சக்கரத்தையும் ஊரு அபய அஸ்தங்களையுங்கொண்டு தெரிந்து கொள்ளவேண்டியதுதான். காத்தல்தொழில் கைவரப்பெறுதற்காகத் திருமால் பூசிக்கிறார்.

தலவிருட்சம் - மா

என்ன தோப்பு என்று கேட்கிறீர்கள். இத்தலமே சூதவனந்தானே. பெருமானும் மாவடிவைகிய மகேஸ்வரன் தானே. ஆதி மாயூரநாதர் ஆலயம் இதுவே.

துலா மாசத்தில் – கடைமுழுக்குநாளில் பல லட்சக் கணக்கான மக்கள், பஞ்சமூர்த்திகள் தீர்த்தம் கொடுத் தருளும்போது காவிரியில் நீராடுகிருர்கள்.



"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

—அப்பர்சுவாமிகள்

ஸ்ரீகண்டபரமசிவன் முதலாகத் தொடர்ந்து இடையீடில்லாத பரம்பரையாக வருகின்ற ஞான ஆதீனம் திருவாவடுதுறை. இந்த ஆதீனத்தின் முதற்குரவர் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள். இப்போது இருபத்தொன்ருவது ஞான சந்ததியாக விளங்கி வருகின்றவர்கள் ஸ்ரீ - ல - ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள். இந்த ஆதீனம் சைவ சித்தாந்த சாத்திரங்களையும், பண்டார சாத்திரங்களையும், சிற்றுரை மாபாடியம் பாயிரவிருத்தி சூத்திரவிருத்தி நன்னூல்விருத்தி இவைகளையும், பல புராண இதிகாச காவியங்களையும் நானூறு ஆண்டுகளாகப் படைத்துவருகிறது. ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிகர், வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் முதலான பல குருமகாசந்நிதானங்கள் நிறைந்த இருமொழிப் புலமையோடு அனுபூதி மான்களாகவும் விளங்கிவந்த நிலையம். சிவஞான சுவாமிகள் முதலாக மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இறுதியாகப் பல புலவர்களைப் படைத்து மொழியை வளர்த்து வருகின்ற செந்தமிழ்க் கருவூலம். இப்போதும் தமிழ் படித்தவர்கள் யாராயிருந்தாலும் இவ்வாதீன மாணவ பரம்பரையைச் சார்ந்தவர்களாகவே இருப்பர்.

திருவிடைமருதூர், மாயூரம், ஆளுடையார் கோயில் போன்ற பதினறு திருக்கோயில்கள் இதன் பரிபாலனத்தில் உள்ளன. மதுரை, திருச்செந்தூர், பாபநாசம் முதலிய இடங்களிலுள்ள கட்டளைகள் இவ்வாதீனத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டவை. சுசீந்திரம் கன்னியாகுமரி முதலிய சில சிறந்த தலங்களில், மண்டகப்படி ஏறுபடி முதலியன இந்த ஆதீனத்தால் இயற்றப்பெற்று வருகின்றன.

திருப்பணி கும்பாபிடேகம் உற்சவம் முதலிய பலவற்றிற்குப் பொருளுதவி செய்யப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்துக் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவைகளில் பயிலும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் முதலியன உதவி, அவர்கள் கல்வியை ஊக்கிவருகிறது. செங்கிப்பட்டி டி. பி. சானிடோரியத்துக்கு ஆண்டுதோறும் 10000 ரூபாய் உதவி செய்கிறது. சமயசம்பந்தமான பல மாநாடுகட்கும், கழகங்கட்கும், நூல்நிலையங்கட்கும் பொருளுதவி செய்துவருகிறது. சிவாகம சித்தாந்த சாத்திரங்களையும், பல ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டுச் செந்தமிழை வளர்க்கும் செந்தமிழ்ப் பண்ணை இதுவே. சமய சம்பந்தமான பண்டிகைகள் விழாக்கள்பற்றிய துண்டுப் பிரசுரங்களையும் வழங்கிச் சமய அறிவைப் பரப்பிவருகிறது.

சமயப்பிரசாரகர்கள் பன்னிருவரை நியமித்து, செந்தமிழ்நாடெங்கும் சிவநெறி பரப்பிவருகிறது. மத வெறுப்பில்லாமல் மத உணர்ச்சி பரவுவதற்காகத் திருவெம்பாவை மாநாடுகளையும் செந்தமிழ்ச் சங்கங்களையும் நடத்திவருகிறது. ஏழை,

அனுதை மாணவர்கட்குத் திருவானைக்கா முதலிய இடங்களில் இலவச உணவும் உறையுளுமளித்து அவர்கள் படிப்புக்கு வசதிசெய்துவருகிறது.

செங்கோட்டை, தென்காசி, மேலகரம், திருநெல்வேலி, விக்கிரமசிங்கபுரம் முதலான பதினேரிடங்களில் திருமுறைப் பாடசாலைகளை அமைத்து மாணவ மாணவிகளுக்குப் பரிசும் உதவிகளும் தந்து பண்ணிசைத் தமிழைப் பரப்பிவருகிறது. திருவாவடுதுறையிலும், காசிமுதல் கன்னியாகுமரி வரை உள்ள கிளை மடங்களிலும் மகேசுரபூசையும் அன்னமளிப்பும் செய்துவருகிறது. திருவிடைமருதூரில் 'திருவாவடுதுறை ஆதீன உயர்நிலைப் பள்ளி' ஒன்றை அமைத்து, பெரும்பாலான மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் மதிய உணவு முதலியவைகளை உதவிப் பரிபாலித்து வருகிறது. திருவிடைமருதூரிலும், திருவாவடுதுறையிலும் தொடக்கப்பள்ளியும் ஆதாரப்பள்ளிகளும் அமைத்துப் போற்றிவருகிறது. ஆண்டுதோறும் திருமுறை விழாக்களையும், சித்தாந்த சைவமாநாடு, திருமந்திரமாநாடு முதலிய பல மாநாடுகளையும் நடத்திவருகிறது.

இவ்வண்ணம் உரிமைக்கும் காலத்திற்கும் தக்கவாறு பதி புண்ணியத்தையும், பசு புண்ணியங்களையும் செய்துவருகின்றது இவ்வாதீனம். இப்பொழுது ஸ்ரீ மாயூரநாதசுவாமி கோயிலை நான்குலட்சரூபாய் செலவில் திருப்பணிகள் பல வற்றைச் சிறப்பானமுறையில் நிறைவேற்றிப் பிலவ-ஞு சித்திரை-மீ 16உ வெள்ளிக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடத்துகிறது.

திருச்சிற்றம்பலம்.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சிக்கு உட்பட்டது. இப்போது ஞானபீடத்தில் இருப்பவர்கள் இவர்கள்.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —

27682
27515

167